Registered as a Newspaper

A/L 86
காவிகள்
செவ்வாய், வியாழன் நாட்களில்
2-30இல் இருந்து 4-30 வரை
ஆரம்பம்: 3—4—86
ஆசிரியர்: ரவிமோகன்
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கும் பெருமான் கோவிலுக்கும் இடையில்)

# உதயன்

விலை ரூ-1/=

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

A/L 86
நுண்கணிதம்
(பிரயோகம் மட்டும்)
புதன், வெள்ளி நாட்களில்
2-30இல் இருந்து 4-30 வரை
ஆரம்பம்: 2—4—86
ஆசிரியர்: ரவிமோகன்
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோயிலுக்கும் இடையில்)

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன வருடம் பங்குனி மீ 14 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 றஜப். பிறை 15 (27 03 1986) UTHAYAN - A LIVELY TAMIL DAILY கதிர்:111

வானத்தாக்குதல் நிறுத்தம் அமுலில்; ஆனால் நேற்று . . . . . .

# தெல்லிப்பளையில் 2½ மணி நேரம் ஹெலிக்கொப்டர் சூடு!

## ஒருவர் மரணம் மூவர் காயம்

— பலாலிச் செய்தியாளர் கே. எஸ். ராஜா —

பலாலி, மார்ச் 27

வானத்தாக்குதலை இடைநிறுத்தி, அதனை நீடித்திருப்பதாக அரசாங்கம் அறிவித்த போதிலும் . . . . . .

தெல்லிப்பளைப் பகுதியிலும் அதன் சுற்று வட்டாரங்களிலும் நேற்று சுமார் இரண்டரை மணி நேரம் ஹெலிகொப்டர் ஒன்று தாக்குதல் நடத்தியது அதில் ஒருவர் மரணமானார் மூவர் காயமடைந்தனர்.

பலாலி விமான நிலையத்தை அண்டியுள்ள குரும்பசிட்டி, கட்டுவன், தெல்லிப்பளை, வயாவிளான், அம்பனைப் பகுதிகளில் நேற்று இரண்டரை மணித்தியாலமாக ஹெலிக்கொப்டர் தாக்குதல் நடந்தது.

இச்சம்பவம் பற்றி அறியப்படுவதாவது:-

நேற்றுக்காலை 11 30 மணியளவில் பலாலி விமான நிலையத்தைச் சூழவுள்ள பகுதிகளில் ஹெலிக்கொப்டர் ஒன்று ரோந்து சுற்றிக்கொண்டிருந்தது.

குரும்பசிட்டியிலுள்ள ஓர் இந்து ஆலயத்துக்கு அண்மையில் சென்று கொண்டிருந்த ஒரு நீல நிற டிரக்கினைக் கண்டதும் அதன் மீது ஹெலிக்கொப்டர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தது

இதனைத்தொடர்ந்து, டிரக் நிறுத்தப்பட்டு அதிலிருந்தவர்கள் இறங்கி ஓடிவிட்டனர். எனினும் ஹெலிக்கொப்டர் அப்பகுதிகளில் சுமார் ஒரு மணி நேரமாக சுட்டுக்கொண்டேயிருந்தது.

அதன் பின்னர் வயாவிளான், கட்டுவன்,

(4ஆம் பக்கம் பார்க்க)

காயமடைந்தோர் விவரம்

பலாலி, மார்ச் 27

நேற்று குரும்பசிட்டி, கட்டுவன் தெல்லிப்பளைப் பகுதிகளில் ஹெலிக்கொப்டர் தாக்குதலுக்கு இலக்காகிக் காயமடைந்தவர்களின் விவரம் பின்வருமாறு;

1. திரு. கேசவன் ஆனந்தராசா (வயது 68) குரும்பசிட்டி பேக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல் போனோர்

### இராணுவ முகாமில் கண்டுபிடிப்பு

நல்லூர், மார்ச் 27

கடலில் காணாமல் போனவர்கள் எனக் கருதப்படும் இரண்டு பேர் யாழ் கோட்டை இராணுவ முகாமில் இருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது

இச்சம்பவம் பற்றி அறியப்படுவதாவது;

இவர்கள் கடந்த 21ந்திகதி வெள்ளிக்கிழமை அனலைதீவில் இருந்து ஊர்காவற்றுறை நோக்கிப் படகு ஒன்றில் பிரயாணம் செய்து கொண்டு இருந்த போது திடீரென்று காணாமல் போய் விட்டனராம்.

இது தொடர்பாக அவர்களது உறவினர்கள் யாழ் அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டனர்.

அரசாங்க அதிபர் சகல முகாம்களுடன் தொடர்பு கொண்டதன் விளைவாக அவர்கள் யாழ் கோட்டை முகாமில் தடுத்து வைக்கப்பட்டது தெரியவந்தது

இவர்கள் விவரம் வருமாறு;

மாணிக்கப் ரகுபதி (30வயது) அனலைதீவு. ஆறுமுகம் செல்லத்துரை (55 வயது) ஆகியோரே யாழ் கோட்டை முகாமில் தடுத்து வைக்கப்பட்டவர்களாவர்.

# இலங்கையில் ஆயுத உற்பத்திக்கு உதவச் சீனா மறுப்பு

பீகிங், மார்ச் 26

இராணுவ ஆயுத உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை நிறுவ உதவி செய்யும்படி இலங்கை விடுத்த கோரிக்கையை மக்கள் சீனக் குடியரசு நிராகரித்துவிட்டது

வளர்ந்து வரும் சீனா—இந்திய உறவுக்கு குந்தகமாக நடக்க விரும்பவில்லை என்று சீனா, இலங்கைக்குக் கூறிவிட்டது.

அண்மையில் சீன ஜனாதிபதி, இலங்கைக்கு வந்திருந்தார். அப்போது அவருக்கு இலங்கை அரசு செங்கம்பள வரவேற்பு அளித்தது.

அதன் பின்னர் நடந்த பேச்சுவார்த்தைகளின் போது, இலங்கையில் தீவிரவாதிகளுக்கு எதிராக நடத்தப்படும் போராட்டத்திற்கு ஆயுத தளபாட உதவிகள் வழங்கும்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனா, சீன ஜனாதிபதியைக் கேட்டுக் கொண்டார் என்று நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து அறிய வருகின்றது.

● சிறுரக ஆயுதங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை நிறுவுவதற்கு உதவி செய்தல்.

● பீரங்கிப் படகுகளை இலங்கைக்கு வழங்குவது

மேற்கண்ட கோரிக்கைகளை இலங்கைத் தரப்பினர், சீன ஜனாதிபதியிடம் முன்வைத்தனராம்.

இக்கோரிக்கைகளை சீன ஜனாதிபதி நிராகரித்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் ஷெல் குண்டு

### 2 பேர் காயம்; நகரில் பதற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

மன்னாரில் நேற்று நிலக்கண்ணி ஒன்று வெடித்ததை அடுத்து மன்னார் இராணுவ முகாமிலிருந்து ஷெல் குண்டுகள் தீர்க்கப்பட்டன.

பாடசாலை ஒன்றுக்கு மிக சமீபமாக விழுந்து வெடித்த ஷெல் குண்டு ஒன்றினால் முஸ்லிம் ஒருவரும் தமிழர் ஒருவரும் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து மன்னாரில் எங்கும் பதற்றம் நிலவியது. கடைகள் யாவும் இழுத்துப் பூட்டப்பட்டன போக்குவரத்து ஸ்தம்பித்தது. வீதிகளில் நடமாட்டம் இருக்கவில்லை நகர் வெறிச்சோடியது.

நேற்றுக்காலை 8·45 மணியளவில் ஸ்ரேசன் வீதிப் பக்கமாக நிலக்கண்ணி ஒன்று வெடித்தது. வெடியினால் ஏற்பட்ட உயிர், உடைமை இழப்புகள் பற்றிய விவரம் ஏதும் தெரியவில்லை.

இதனையடுத்து அப்பகுதிக்கு இராணுவ வீரர்கள் பெருமளவில் விரைந்தனர். நேற்று மாலை 4 மணிவரை அவர்களின் நடமாட்டம் அப்பகுதியில் காணப்பட்டது.

ஷெல்தாக்குதல்களினால் சுரேன் (வயது19), தாஜுதீன் (வயது 40) ஆகிய இருவரும் காயமடைந்தனர்.

## யாழ்ப்பாண டிப்போ

## பஸ் ஊழியர்கள் நேற்று வேலை நிறுத்தம்

நல்லூர், மார்ச் 27

யாழ்ப்பாண பஸ் டிப்போவைச் சேர்ந்த சாரதிகள், கண்டக்டர்கள், மெக்கானிக்குகள் நேற்று வேலைநிறுத்தம் செய்தனர்.

இதனால் நேற்று யாழ்ப்பாண டிப்போவிற்குச் சொந்தமான பஸ் வண்டிகள் எதுவும் சேவையில் ஈடுபடவில்லை.

யாழ்ப்பாண பஸ் டிப்போ ஊழியர்களுக்கு பெப்ரவரி மாதச் சம்பளம் இதுவரை வழங்கப்படாததே இவ் வேலை நிறுத்தத்திற்குக் காரணமாகும்.

மார்ச்மாதம் எட்டாம் திகதி வழங்கப்படவேண்டிய இச்சம்பளம் இன்று வரையும் வழங்கப்படாததால் சம்பளம் வழங்கப்படும்வரை வேலைநிறுத்தத்தைத் தொடருவதென ஊழியர்கள் தீர்மானித்துள்ளனர்.

வ. பி. போ. சபை ஊழியர்களுக்கான சம்பளப்பணம் கொழும்பில் இருந்தே யாழ்ப்பாணத்திற்கு வழங்கப்பட்டு வந்ததாகவும், இம்முறை இப்பணம் வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுபநேரம்

27- 3- 1986
வியாழக்கிழமை
சுபநேரம்:
7.44 முதல் 9.14 வரை
ராகுகாலம்:
1.44 முதல் 3.14 வரை
இன்று பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

★ இலங்கைக்கு

## பகத்தை அனுப்புங்கள் பண்டாரி வேண்டாம்

### அ தி.மு.க. எம்.பி. கேட்கிறார்

புதுடில்லி, மார்ச் 26

இலங்கைக்கு திரு. பண்டாரியை அனுப்ப வேண்டாம். வெளிவிவகார அமைச்சர் பலிராம் பகத்தை அனுப்புங்கள்.

அ தி மு.க. எம் பி. திரு ஏ. குழந்தைவேலு இந்திய நாடாளுமன்றத்தில் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

வெளிவிவகார அமைச்சு விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே திரு குழந்தைவேலு மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

அ.தி.மு.க. நாடாளுமன்றக் குழுவின் தலைவர் திரு. குழந்தைவேலு. "பண்டாரி வேண்டாம்; தமிழக அரசு சொல்கிறது" — என்ற தலைப்பில் மார்ச் 25 உதயன் இதழில் செய்தி ஏற்கனவே வெளியானது தெரிந்ததே.

## நகரத்தின் மத்தியில் ஓர் புதையல்?

யாழ்ப்பாணம், மார்ச் 27

நேற்றுக்காலைசுமார் 10 மணியளவில் நகரின் மத்தியில் பலத்த குண்டுச் சத்தம் கேட்டது. வழமை போல் மக்கள் பதற்றம் அடைந்து அல்லோல கல்லோலப்பட்டனர்.

சிலநிமிஷ நேரத்தில் பதற்றம் அடங்கியது. வணக்க ஸ்தலம் ஒன்றில் 'புதையல்' எடுப்பதற்காக வைக்கப்பட்ட டைனமைட் குண்டுச் சத்தமே அது என்று பின்னர் தெரிய வந்தது.

அந்தப் 'புதையல்' எடுக்கும் வேலை பல மணிநேரம் நடந்தது. வணக்க ஸ்தலத்தைச் சுற்றிவர ஆயுதந்தாங்கிய இனந்தெரியாதவர்கள் காவலுக்குநின்றனர்.

"புதையல் தேடியவர்களுக்குப் பயன் கிடைத்ததாகவும், குறிப்பிட்ட எடையுள்ள தங்கம் (நகைகளாக) கிடைத்ததாகவும் நகரம் எங்கும் பரவலாகப் பேசப்பட்டது.

சம்பந்தப்பட்ட வணக்க ஸ்தலம் ஏற்கனவே சேதமடைந்திருந்ததொன்றாகும்.

## இராணுவம் வீடுகளை தகர்த்தது

வல்வெட்டித்துறை, மார்ச் 27

பல லட்சம் பெறுமதியான நான்கு பெரிய வீடுகளை வல்வை இராணுவத்தினர் குண்டு வைத்து தகர்த்தனர்.

ஏற்கனவே முகாம் தற்பாதுகாப்பு கருதி இச்சுற்றுப் பகுதியிலுள்ள சுமார் 25க்கு மேற்பட்ட பெரிய வீடுகள் தகர்க்கப்பட்டுள்ளன.

செவ்வாய்க்கிழமை மாலையில் மேலும் 4 பெரிய, பலலட்சம் பெறுமதியான வீடுகளை தகர்த்தனர்.

இப்பாரிய சத்தங்களினால் அண்டையிலுள்ள வீடுகளின் பல ஜன்னல்கள் சிதறின. மக்கள் பலத்த பீதியடைந்தனர்.

## இன்று யாழ் நகரில் தீவட்டி ஊர்வலம்

### பிற்பகல் 2 மணிக்கு கடைகளை மூட கோரிக்கை

நல்லூர், மார்ச் 27

இன்று மாலை யாழ் நகரில் தீவட்டி ஊர்வலம் நடைபெறவுள்ளது.

அண்ணா தி.மு.க ஆதரவு ன் பதினைந்து கூட்டமைப்புக்கள் இணைந்து இந்த ஊர்வலத்தை நடத்துகின்றன.

இன்று மாலை 4 மணியளவில் யாழ். சிவன் கோயிலடியில் இருந்து ஆரம்பிக்கும் ஊர்வலம் நல்லூர் கந்தசுவாமி கோயிலில் சென்று முடிவடையும்.

இந்த ஊர்வலம் செல்லும் பாதைகளில் வசிப்போர் ஊர்வலத்தில் கொண்டுவரப்படும் தீவட்டிகளுக்குத் தேங்காய் எண்ணெய் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வெளியிடங்களில் இருந்து வந்து கலந்து கொள்வோருக்கு போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஊர்வலத்திற்கு ஆதரவு வழங்கும் வகையில் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு யாழ் நகர கடைகள் அனைத்தையும் மூடுமாறு ஊர்வல அமைப்பாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## 27 பேர் கைது!

திருகோணமலை, மார்ச் 27

சாம்பல்தீவு, ஆத்திமோட்டைப் பகுதிகளில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த தேடுதல் வேட்டையின்போது பெண்கள் உட்பட 27 பேரை, விசாரணைக்காக பாதுகாப்புப் படையினர் அழைத்துச் சென்றனர்.

விசாரணையின் பின்னர் நிரபராதிகளாகக் காணப்படுவோர் விடுவிக்கப்படுவர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின.

### உணவு முத்திரை

யாழ்ப்பாணம், மார்ச் 27

700 ரூபாவுக்குக் குறைவாக மாத வருமானம் பெறுவோர் உணவு முத்திரை பெறுவதற்கான 'பி' விண்ணப் ப்படிவத்தை ஏப்ரல் 4 ஆம் திகதிக்கு முன்னர் கிராம சேவையாளர்களிடமிருந்துபெற்று 7 தினங்களுக்குள் வறுமை நிவாரணக் கமிட்டியினரிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## காஸ் தொழிற்சாலையில் வேலைகள் நிறுத்தம்

கொழும்பு, மார்ச் 27

சபுகஸ்கந்தையிலுள்ள எல். பி. காஸ் தொழிற்சாலையில் காஸ் நிரப்பும் வேலை காலவரையறையின்றி இடைநிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை ஆங்கு ஏற்பட்ட வெடிவிபத்து ஒன்றை அடுத்தே வேலைகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டன

இந்த வெடி விபத்திற்கு தமிழீழ செம்படை உரிமை கோரியிருப்பது குறிப்பிடத்தக்கது.



காஸ் கொம்பனியிலே வேலை நிப்பாட்டியாச் சாமே . . . !

அப்ப காஸ் குக்கர் எரிக்கிற பெண்டுகள் பழையபடி விறகு எரிச்சு அடுப்பூதவேணுமாக்கும் . . . !

## குடாநாடு எங்கும் இன்று முழு அளவில் தாதிகள் வேலை நிறுத்தம்

நல்லூர், மார்ச் 27

யாழ்குடா நாட்டில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் எல்லாத் தாதியார்களும் இன்று வேலை நிறுத்தத்தில் குதிக்கின்றனர்.

அவசர சிகிச்சைப் பிரிவிலும் தாதிமார் கடமையாற்ற மாட்டார்கள் என்றும் தெரியவருகிறது.

தென்னிலங்கையிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் தாதியார்களின் சம்பள உயர்வுக் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாகவே இந்த அடையாள வேலை நிறுத்தம் இன்று நடைபெறுகிறது.

நேற்று நடைபெற்ற யாழ் வைத்தியசாலை அடையாள வேலை நிறுத்தத்தில் ஒரு சிறு பகுதியினரைத்தவிர மற்றைய அனைத்துத் தாதிமார்களும் கலந்து கொண்டனர்.

(முன்னர் வந்த செய்தி 2 ஆம் பக்கத்தில்)

## சந்நிதி கோயில் சுற்றுடலில் கிடந்த சடலங்கள் இரவில் அகற்றப்பட்டன

வல்வெட்டித்துறை, மார்ச் 27

தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோயில சுற்றுடலில் கிடந்த இரண்டு சடலங்களும் கடந்த செவ்வாய் இரவு அகற்றப்பட்டன. ஆனால் கோயிலில் இன்னும் பூஜைகள் ஆரம்பமாகவில்லை.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் செவ்வாய்க்கிழமை வரையான ஐந்து நாட்களில் சந்நிதி கோயிலடியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான நான்கு பேரின் பெயர் விவரம் வருமாறு;

மு.கந்தசாமி (வயது 70) பருத்தித்துறையைச் சேர்ந்தவர்.

க.ஆறுமுகம் (வயது 50) தொண்டமானாறு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் காவலாளி.

சோ. சுப்பிரமணியம் (வயது50) தெல்லிப்பளை வாசி.

செ.சண்முகம் (வயது 60)

## இணைப்பு அதிகாரியிடம் முறையீடு

மட்டக்களப்பு, மார்ச் 27

ஊர்காவல் படையினரின் செயல்கள் பற்றி மட்டக்களப்பு இணைப்பு அதிகாரியிடம் மட்டக்களப்பு பிரஜைகள் குழு கடந்த செவ்வாய்க்கிழமை முறையிட்டது.

முறைப்பாடுகள் குறித்து கவனிப்பதாக இணைப்பு அதிகாரி திரு மாக்ஸி பெரேரா உறுதியளித்தார்.

## சடலம் அகற்றப்பட்டது

வல்வெட்டித்துறை, மார்ச் 27

வல்வை இராணுவ முகாமுக்கு மிகசமீபத்தில் கடந்த திங்கள் மாலையில் சுடப்பட்டு இறந்து கிடந்தவரின் சடலம் கடந்த செவ்வாய் இரவு இளைஞர்களின் பெருமுயற்சியினால் எடுக்கப்பட்டு, உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதுபற்றி அறியவருவதாவது:-

திங்கள் மாலையில் வல்வை இராணுவ முகா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தெரியுமோ இந்தச் சேதி?

யாழ்ப்பாணம், மார்ச் 27

வட மாகாணத்தின் தெற்கே உள்ளது அந்த நகரம். அங்கேயும் பல ஆயுதப் படை முகாம்கள் உள்ளன.

அவற்றில் ஒன்றுக்கு, நேற்று மேலும் புதிதாக சிறுரக விமானங்களும், ஹெலிக்கொப்டர்களும் தென்னிலங்கையில் இருந்து வந்தனவாம்.

அவை மட்டும் என்று எண்ணி விடாதீர்கள் அவற்றில் பல "வெளியார்"களும் வந்தார்களாம்.

அந்த வெளியார்களுக்கு முகாமில் ஏகப்பட்ட வரவேற்பாம். அணிவகுப்பு மரியாதை. அது இது என்று !

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபியா மீது அமெரிக்கா அடாவடித்தனம்

## பாதுகாப்பு சபையிடம் கடாபி முறையீடு

திரிப்போலி, மார்ச்.26

லிபியாவின் இறைமையையும் தன்னுதிக்கத்தையும் அமெரிக்கா மதிக்க மறுக்கிறது. அத்துமீறிய அடாவடித்தனங்களை அது லிபியப் பிராந்தியத்தில் கட்டவிழ்த்துள்ளது.

இவ்வாறு கேர்ணல் கடாபி ஐ நா. பாதுகாப்புச் சபையிடம் தெரிவித்துள்ளதுடன் இதை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதை அடுத்து கேர்ணல் கடாபி பத்திரிகையாளர் மத்தியில் பேசும் பொழுது;

லிபியாவுக்குரிய ஷித் தேகுடாவில் அமெரிக்க அத்துமீறல்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டால் அதற்கு லிபியா பதிலடி கொடுக்க ஆயத்தமாகவே இருக்கிறது

அமெரிக்காவின் இந்த மோசமான நடவடிக்கைகள் லிபியாவுக்கு மட்டுமல்ல முழு அரபு உலகத்துக்குமே பெரியதொரு அச்சுறுத்தலாகும் என்றார்.

அமெரிக்காவின் நடவடிக்கைகளை சோவியத் ரஷ்யா கடுமையாகக் கண்டித்துள்ளது.

அமெரிக்க-லிபிய எதிர் மோதல் தொடர்பாக அரபு லீக் நாடுகள் ரியூனிஸ் நகரில் கூடி ஆலோசனை நடத்தியுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையிடம் இந்த விடயத்தை விவாதிக்குமாறு கேட்கப் போவதாக அந்த நாடுகள் தெரிவித்தன.

அமெரிக்காவின் 6வது கடற்படைப் பிரிவு மத்திய தரைக் கடற்பிராந்தியத்திலிருந்து உடனடியாக விட்டு விலகிச் சென்றுவிட வேண்டும் எனவும் மேலும் எச்சரிக்கை விடுத்துள்ளன.

லிபியாவுக்கு தனது முழு ஆதரவையும் வழங்குவதாக ஈரான் அறிவித்துள்ளது.

இத்தாலியப் பிரதமர் கிறக்ஸி இந்த விடயத்தை விவாதிப்பதற்கு அவசரக் கூட்டமொன்றைக் கூட்டியதாக செய்திகளில் தெரிவிக்கப்பட்டது

இத்தாலிய அரசு அமெரிக்க தரப்பு அணுகுமுறைகளை அங்கீகரித்து வரும் நாடென அடையாளம் காணப்பட்ட நாடாகும்.

இதனிடையே கனடிய அரசு அமெரிக்க-லிபிய எதிர் மோதல்களால் நிலைமை மோசமடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமெனவும் இரு நாடுகளும் மோதல்களை நிறுத்திக் கொள்ள வேண்டுமெனவும் கேட்டுள்ளது

5 வருடங்களுக்கு முன் ஷித்தே குடாவில் வைத்து லிபிய விமானங்களை அமெரிக்கா சுட்டு வீழ்த்தியதே இந்த மோதலுக்கான அடிப்படைக் காரணம் என கருத்துகளில் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே எதிர் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற கடாபியின் அறிவிப்பை அடுத்து அமெரிக்க விமானத் தளங்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பிந்திய பிற செய்திகளில் தெரிவிக்கப்பட்டது.

## பிலிப்பீன்ஸ் தேசிய மன்றம் கலைக்கப்பட்டு விட்டது

### ஜனாதிபதிக்கு கூடுதல் அதிகாரம் வழங்கும் அரசமைப்பு பிரகடனம்

மணிலா, மார்ச் 26

பிலிப்பீன்ஸ் நாடாளுமன்றமான தேசிய மன்றத்தை ஜனாதிபதி திருமதி கொருசன் அக்கியூனோ கலைத்துவிட்டார்.

இதற்குப் பதிலாக ஜனாதிபதிக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கக் கூடிய புதிய அரசமைப்பு ஒன்றை அவர் பிரகடனப் படுத்தியுள்ளார்.

இன்னும் ஓராண்டு காலத்துள் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் புதிய அரசமைப்பு பிரகடனப்படுத்தப்படுமெனவும் அதுவரை இடைக்கால ஏற்பாடாக இந்தப் புதிய அரசமைப்பு அமுலில் இருக்குமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தான் ஆட்சிக்கு வந்ததால் மார்க்கோஸின் இராணுவத் தன்மை கொண்ட ஆட்சி முறை நீக்கப்பட்டு மக்களின் ஜனநாயக உரிமைகள் உறுதி செய்யப்படும் என கொருசன் ஏற்கெனவே தெரிவித்திருந்தார்.

இதற்கிணங்கவே இந்த மாற்றம் நடைமுறைப் படுத்தப் படுவதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையே திருமதி கொருசன் அக்கியூனோவின் உள்நாட்டு சமாதான முயற்சியை பிலிப்பீன்ஸ் மக்கள் கம்யூனிஸ்ட் கட்சி கருத்துக் கெடுத்துள்ளது.

யுத்த நிறுத்தப் பேச்சுக்களை தாம் நடத்த ஆயத்தமாக இருப்பதாக இந்தக் கெரில்லா போராட்ட இயக்கம் முதன் முறையாக தனது அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

## பாபா அறிவுரை

புதுடில்லி, மார்ச் 26

நாட்டை நன்முறையில் உருவாக்கும் பணியில் மக்கள் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு பாரதத்தின் முதுபெரும் விடுதலைப் போராட்ட வீரர் பாபா ஆம்தே மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

புதுடில்லி நாடாளுமன்றத்தில் அவரது உரை இடம் பெற்றது. பாபா அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

நாட்டின் நலன்களுக்குக் கேடு விளைவிக்கும் சக்திகளை மக்கள் முறியடிக்க வேண்டும். பஞ்சாப் போன்ற இடங்களில் நடக்கும் கலவரங்கள் கவலை தருவதாகவே இருக்கிறது.

ஆண்டவன் நமக்குக் கைகளைக் கொடுத்தது ஆக்குவதற்கே தவிர அழித்தொழிப்பதற்கு அல்ல. இவ்வாறு அவர் இடித்துரைத்தார்.

## நிறையப் படங்களில் நிறைவோடு நடிக்கிறேன்

### சிவாஜி கணேசன் கூறுகிறார்

என்னால் தான் பல படங்கள் வெற்றியடைகின்றன என்று சொல்லுவதை நான் ஒப்புக் கொள்ளவில்லை. தனிப்பட்ட ஒருவரால் மட்டும் படம் வெற்றிப் படமாக அமைவதில்லை.

நடிகர், நடிகைகள், டைரக்டர், ஒளிப்பதிவாளர், கதையாசிரியர் என்றிப்படிப் படத்தோடு தொடர்புள்ள எல்லாக் கலைஞர்களும் சேர்ந்து பெற்றெடுக்கும் குழந்தை தான் ஒரு படத்தின் வெற்றி.

வ. உ. சி. பாரதி போன்ற தேசியத் தலைவர்களின் பாத்திரம், பகவத் சிங், நேதாஜி, திருப்பூர் குமரன், திலகர் போன்ற மாபெரும் தேசபக்தர்களின் பாத்திரம் ஏற்று நடிப்பதில் எனக்கு அபாரமான ஆர்வம் உண்டு.

நான் சிறிதும் கவலைப்படாமல் வாழ்கின்றேன். என் அன்னையில்லை என்ற ஒரு குறையைத் தவிர மற்றப்படி நான் மன நிறைவோடும் மகிழ்ச்சியோடும் இருக்கின்றேன்.

நடிகர் திலகம் என்ற பட்டம் கிடைத்ததையிட்டு நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன் நான் ஒரு உண்மைத் தொண்டன்.

நல்ல கருத்தமைந்த பாத்திரங்கள் எனக்கு நிறையக் கிடைக்கின்றன. ஓய்வில்லாமல் நடிக்கிறேன்.

இப்படிப்பட்ட பாத்திரத்தில் நடித்தால் தானே தேச மக்களுக்குத் தேவையான நல்ல கருத்தம் சங்கதி வெளிக்கொணர முடியும்.

என்னை மிக்க அன்புடன் நேசிக்கும் லட்சோப லட்சம் திரையுலக ரசிர்களுக்கு நான் என்ன கைம்மாறுசெய்யப் போகிறேன்.

என் நெஞ்சம் நிறைந்த கனிவான உள்ளங்குளிர்ந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதை விட வேறு என்ன என்னால் செய்ய முடியும்?

இப்படிக் கூறுபவர் வேறு யாருமல்ல, நம் நெஞ்சங்களில் நிறைந்த பத்மஸ்ரீ சிவாஜி கணேசன் அவர்கள் தான்.

சிவாஜி படம் என்றால் சிறுவர் முதல் முதியவர் வரை எல்லோரும் விரும்புவர் உங்களுக்கும் அப்படித் தானே!

தினசரி சினிமா

## ஜப்பானில் ராக்கெட் வீச்சு

டோக்கியோ, மார்ச் 26

ஜப்பானிய அரச மாளிகையும் அமெரிக்கத் தூதரகமும் நேற்று ராக்கெட் தாக்குதல்களுக்கு உள்ளாகின.

7 நாடுகளின் பொருளாதார கமிஷன் மாநாடு மே மாதம் டோக்கியோவில் நடைபெறுகின்றது.

இதற்கு எதிராகவே தீவிரவாதிகள் இத்தாக்குதலை நடத்தி இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

# வெளி உலகில்

## சமாதான சிந்தனைகளில் அடிப்படை மாற்றம் தேவை

### சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் உரைக்கோவையில் ராஜீவ்

புதுடில்லி, மார்ச்.26

உலக சமாதானத்துக்கான வழிமுறைகளில் அடிப்படை மாற்றங்கள் காணப்பட வேண்டும்.

இவ்வாறு பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.

டாக்டர் சர்வபள்ளி இராதா கிருஷ்ணன், உலக சமாதானம் என்பவற்றுக்கான உரைக் கோவை அரங்கை அவர் தொடக்கி வைத்து உரையாற்றினார்.

காந்தி தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில்;

உண்மையான சமாதானம் வேரூன்ற நமது கருத்துக்களை மற்றவர்களுக்கு திணிக்காது மற்றவர் கருத்துக்களை நாம் உள்வாங்கும் நெகிழ்ச்சி வேண்டும்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் உலகளாவிய சமாதானத்துக்கான உயர்ந்த குறிக்கோளைக் கொண்டிருந்தார்.

அந்தப் பணிகளில் பாரதம் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் பக்குவம் பெற்ற நாடாக வளர்ச்சி காண்கிறது என்றார்.

## கதவை உதைத்த கறுப்புச் சட்டைக்காரர் எங்களை நோக்கி சுட்டனர்

### காயமடைந்த பெண் தகவல்

நல்லூர், மார்ச்.27

வீட்டுக் கதவை உதைத்துத் திறந்த கறுப்புச் சட்டைக் காரர்கள் என்னையும் எனது கணவனையும் சுட்டனர்.

நெடுங்கேணி 18 ஆம் கட்டை என்ற இடத்தில் கறுப்புச் சட்டைக்காரரின் தாக்குதலுக்கு இலக்கான மூவர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் இராசு பரஞ்சோதி (41 வயது) என்ற பெண் தனக்கு நடந்த சம்பவம் பற்றி மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது:

வியாழக்கிழமை காலை ஆறுமணியளவில் வீட்டில் படுத்திருந்தோம்.

அப்பொழுது கறுப்புச் சட்டைக்காரர்கள் வருவதாக சிலர் கூறிக் கொண்டு ஓடினார்கள்.

நாங்களும் பயத்தினால் ஓடினோம். ஓடிய பக்கத்தால் வந்த கறுப்புச் சட்டைக்காரர்கள் எம்மைத் துரத்தினர்.

நாம் பயத்தினால் வீட்டினுள் புகுந்து கதவைச் சாத்திக் கொண்டோம்.

கறுப்புச் சட்டைக்காரர் எமது கதவை காலால் உதைந்து திறந்து எம் மீது சுட்டனர்.

இதனால் எனது கணவர் தெய்வாதீனமாக உயிர் தப்பிக் கொண்டார் எனக்குத்தான் காயம் ஏற்பட்டது

இப்படி அவர் சொன்னார்.

---

மின்சார உபகரணம்

சகலவிதமான குளிர்சாதனப் பெட்டிகள் உத்தரவாதத்துடனும், காலதாமதமின்றியும் திருத்திக் கொடுக்கப்படும். சகல திருத்தல் வேலைகளும் தகுதிபெற்ற குளிர்சாதனவியல் பொறியியலாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ் திருத்திக்கொடுக்கப்படும் சகல Compressors, Thermostats, Filter-Driers, Bulbs, Lamb Switch முதலிய உதிரிப்பாகங்களும் சகாய விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். Refrigeration Engineering Services, 159, கன்னாதிட்டி வீதி (பெருமாள் கோயில் அருகாமையில்), யாழ்ப்பாணம்

---

# மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

## அரசிற்கு ஆறு கோரிக்கைகள்

### சுன்னாகம் பிரசைகள் குழு விடுத்தது

சுன்னாகம்; மார்ச். 27

* கொலைகளை நிறுத்தவும் மனித சுதந்திரத்தைப் பேணவும் அரச படைகள் தமிழ்ப்பிரதேசங்களில் இருந்து அகற்றப்பட வேண்டும்.'
* 'இனக் கொலைபுரியும் அரசே! விமானத் தாக்குதலை உடன் நிறுத்து'
* 'தீவுப்பகுதி மக்களின் போக்குவரத்து உணவுக் கஷ்டங்களை தீர்க்க உடன் நடவடிக்கை எடுக்கவும்.'
* 'ஆயிரம் மீற்றர் வலயத்தையும், கடல் பாதுகாப்பு வலயத்தையும் உடனடியாக அகற்றவும்.
* 'கறுப்புச்சட்டைக்காரரையும் விதேசிய படையினரையும் நாட்டை விட்டு வெளியேற்று'
* அடகு நகைகளை அதே வங்கிகளில் கையளிக்கவும்.'

மேற் கூறப்பட்ட ஆறு கோரிக்கைகளும் சுன்னாகம் பிரஜைகள் குழுவினால் விடுக்கப்பட்டது.

பிரஜைகள் குழுவின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. அப்போது மேற்படி ஆறு விடயங்களும் தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன.

பெருந்திரளான மக்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு தமது கருத்துக்களை உணர்ச்சி பூர்வத்துடன் தெரிவித்தார்கள்.

இறுதியில் எல்லோரதும் கருத்துக்களுக்கும் பதில் அளித்த தலைவர் திரு. மாணிக்கவாசகர் எமக்கிடையே ஒற்றுமையை கட்டிவளர்க்க வேண்டும். எமது மக்களிடையே ஏற்படும் பிரிவுகள் தமிழ் மக்களை நசித்து அழித்தொழிக்க விரும்புவோருக்கு சாதகமாக அமைந்துவிடும் என்கிறார்.

## யாழ். தாதிகள் 2 நாள் லீவு

யாழ்ப்பாணம், மார்ச் 27

தென்னிலங்கைத் தாதிகள் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடமைபுரியும் தாதிகள் நேற்றில் இருந்து இரண்டு நாள் சுகவீன லீவில் சென்றுஉள்ளவர்

தென்னிலங்கை அரசாங்க வைத்தியசாலைகளில் 10 தினங்களாக தாதிமார் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## யாழ் மத்திய கல்லூரி முன்னாள் அதிபர்களை கௌரவிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர்களைக் கௌரவிக்க வேண்டும் என்று கோரும் பிரேரணை ஒன்று எதிர்வரும் சனிக்கிழமை நடைபெற இருக்கும் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டத்தில் கொண்டு வரப்பட உள்ளது.

"கல்லூரியின் மூன்று மாடிக் கட்டடத்தைத் திட்டமிட்டுக் கட்டுவித்து நிறைவேற்றியவர்கள் முன்னாள் அதிபர்களான திரு. இ. சபாலிங்கம், திரு. ஈ. கே. சண்முகநாதன்.

யாழ்ப்பாணத்தில் ஷேக்ஸ்பியரின் நாடகங்களை திறம்பட அரங்கேற்றியவர் முன்னாள் அதிபர் திரு ஜே. சி. சார்ள்ஸ்.

இவர்களின் சேவைகளைக் கௌரவிக்கும் வகையில் மூன்று மாடிக் கட்டடத்துக்கு 'இ சபாலிங்கம் ஆசிரியர் கூடம்' 'ஈ. கே. சண்முகநாதன் மண்டபம்', 'ஜே. சி. சார்ள்ஸ் கேட்போர் கூடம்' என்று பெயரிடுதல் வேண்டும்''—

இப்படிக் கூறுகிறது அந்தப் பிரேரணை. சங்கப் பொதுக் கூட்டத்துக்கு சங்கத் தலைவர் டாக்டர் சி. விஜயரா[illegible] தலைமை வகிப்பார்.

## ஹெலிக்கொப்டர் வட்டமிட பதற்றம்

நல்லூர், மார்ச் 27

இருபாலை, கோப்பாய் பகுதிகளில் அடிக்கடி ஹெலிக்கொப்டர் ரோந்து சுற்றுவதால் இப்பகுதிகளில் பதற்ற நிலைமை காணப்படுகிறது

திங்களன்றும் கரிய நிற ஹெலிக்கொப்டர் ஒன்று சுமார் பதினைந்து நிமிடங்கள் இப்பகுதிகளைச் சுற்றி வட்டமிட்டது.

## சிவில் யுத்த விளிம்பில் இலங்கையின் நிலை

### கம்யூனிஸ்கட்சி உறுப்பினர் இந்தியாவில் தகவல்

புதுடில்லி, மார்ச்.26

இலங்கையில் நிலைமை கட்டுமீறிச் செல்கிறது. சிவில் யுத்தம் ஒன்றின் விளிம்பில் இலங்கை நிற்கிறது. வடக்கு மாகாணத்தில் சிவில் நிர்வாகமே ஸ்தம்பித்து விட்டது.

இப்படி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி பொலிட்பீரோ உறுப்பினர் திரு. டி. குணசேகரா பாட்னாவில் வைத்து செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்கு போராளிகளுடன் தொடர்பு இல்லை [illegible] வடக்கு-கிழக்கு மாகா[illegible] பூர்கள் மத்தியில் நல்ல செல்வாக்கு உள்ளது.

தமிழ்ப் போராளிகளை அரச படைகளால் அடக்குவது கஷ்டம். அரச படைகளின் செயல்கள் நிலைமையை இன்னும் மோசமாகியுள்ளன.

தினமும் 11 கோடி 60 லட்சம் ரூபா பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இலங்கை செலவழித்து வருகின்றது.

இப்படி திரு. குணசேகரா சொன்னார்.

பாட்னாவில் நடந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் பங்குபற்ற திரு. குணசேகரா, [illegible] சென்றிருந்தார்.

## கோப்பாயில் லயன்ஸ் கழக கண் சிகிச்சை

யாழ்ப்பாணம், மார்ச் 27

கோப்பாய் லயன்ஸ் கழகம் கண் சிகிச்சை முகாம் ஒன்றை எதிர்வரும் 29 சனிக்கிழமை பிற்பகல் நடத்த உள்ளது.

கோப்பாய் வாசிகள் மட்டுமே இச்சிகிச்சை முகாமில் கலந்து கொண்டு பயனடையலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கண் நிபுணர் டாக்டர் எஸ். அருணாசலம் வைத்திய பரிசோதனைகளை நடத்துவார்.

இத் தகவல்களை லயன்ஸ் கழகச் செயலாளர் திரு எஸ். சண்முகேந்திரன் சொன்னார்.


## ஹோம் பினான்ஸ் லிமிட்டெட்

463, காலி வீதி, கொழும்பு-3. 82, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

### எம்மிடம் வைப்புக் கணக்கு உள்ளோருக்கான விண்ணப்பம்

1985ஆம் ஆண்டு, 56ஆம் இல. வருமானவரிச் சட்டத்தின் கீழ் பிடித்து வைத்தல் வரி சம்பந்தமான வட்டிக் கழிவு பற்றி நாம் நடவடிக்கை எடுப்பதற்கு தரவேண்டிய விபரக்கொத்து கீழ்க்கண்ட முறைப்படி எமக்கு இந்த விபரங்களை உடனடியாக அனுப்பி வைக்கும்படி தயவுடன் கேட்கிறோம்.

இவற்றை அனுப்பாதவருடைய வட்டிப் பணத்தில் 20 வீதம் கட்டாயமாகக் கழித்து வைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

V. K. சபாரட்ணம்,
பொது முகாமையாளர்,
ஹோம் பினான்ஸ் லிமிடெட்,
யாழ்ப்பாணம்.

---

வைப்புக் கணக்கு உடையோரால் நிதி ஸ்தாபனத்திற்கு 1985ஆம் ஆண்டு, 56ஆம் இல. திருத்தச் சட்டத்தின் கீழ் தரும் விபரங்கள்:-

பொது முகாமையாளர்,
ஹோம் பினான்ஸ் லிமிட்டெட்,
82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(1) பெயர்:-
(2) தற்போதைய முகவரி:-
(3) இலங்கை அடையாள அட்டை இலக்கம் அல்லது வியாபாரப் பெயர்ப் பதிவு எண் இலக்கம்:-
(4) வருமான வரி செலுத்துபவராயின் வருமான வரிக் கோவை இலக்கம்;-
(5) எம்மிடம் வைப்புச் செய்துள்ள தனிப்பட்ட அல்லது கூட்டு வைப்புச் செய்த வைப்புக் கணக்கு இலக்கம். 18 வயதிற்குட்பட்ட பிள்ளைகளின் வைப்புக் கணக்குகளும் இத்துடன் சேர்க்கப்பட வேண்டும்.

| வைப்பு இலக்கம் | பெயர் | தொகை |
|---|---|---|
| (1) | | |
| (2) | | |
| (3) | | |
| (4) | | |
| (5) | | |
| (6) | | |

கையொப்பம்/கையொப்பங்கள்.

---

வருமான வரி கட்டாதவர்களும் கட்டத் தேவை இல்லாதவர்களும் தர வேண்டியது.

நான்/நாங்கள் எமது சேமிப்பு வைப்புக் கணக்குகளின் மீது கிடைக்கும் வட்டிக்கு வருமான வரி செலுத்த வேண்டியதில்லை என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

ஆதலால் 20 வீதம் பிடித்து வைத்தல் வரியை எமது வட்டியில் இருந்து கழிக்க வேண்டாமென வேண்டிக்கொள்கிறேன்/கொள்கிறோம்.

கையொப்பம் கையொப்பம் கையொப்பங்கள்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

இறைவனின் அருளைப் பெற இலகுவான மார்க்கம் இறைநாம வழிபாடே.

-பகவான் சத்யசாயிபாபா.

உதயன்

இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24805, 22073
த. பெ. 82
27-03-86

## தென் இலங்கையில் நியாயக் குரல்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து இராணுவத்தை வாபஸ் வாங்குங்கள்

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் சுமுகத் தீர்வு காணுங்கள்

சண்டை விமானங்கள் வேண்டாம் ஆயுதங்கள் வேண்டாம் யுத்தம் வேண்டாம்.

இவ்வாறு குரல் கொடுத்தவர்கள் தமிழ்த் தலைவர்கள் எவருமல்லர். அல்லது அந்தக் கோரிக்கைகளை உள்ளடக்கிய மகஜர் எதையும் தமிழர் பொதுநல ஸ்தாபனம் எதுவும் அரசாங்கத்துக்கு அனுப்பவும் இல்லை.

மேற்கண்ட அம்சங்களை வலியுறுத்தித் தமிழர்கள் குரல் கொடுத்து ஓய்ந்து விட்டார்கள். மகஜர்கள் அனுப்பிச் சலித்து விட்டார்கள். பேசுவதாலோ எழுதுவதாலோ அரசாங்கம் தனது நிலையிலிருந்து மாருது என்ற உண்மை தமிழர்களுக்குப் புரிந்து விட்டது.

தமிழர்கள் விடுக்கக் கூடிய கோரிக்கைகளை சிங்கள மக்கள் இப்போது ஒலிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு சுகததாசா விளையாட்டரங்கில் 21 தொழிற் சங்கங்களின் ஒருநாள் மாநாடு நடந்தது அங்கு தான் தொழிற்சங்கத் தலைவர்கள், ஆரம்பத்தில் குறிப்பிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தினுர்கள்

தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்கள் அரசாங்க எதிரணியினரே. ஆகையால் அவர்கள் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை எதிர்த்துக் குரல் கொடுத்தார்கள் என்று லேசாகக் கொள்ள முடியாது.

தமிழர் பிரச்சினையால் நாட்டின் சிங்கள மக்களும் பாதிக்கப்படுகிருர்கள். வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களைக் கொன்று குவிப்பதற்காக பாதுகாப்புச் செலவு மாதாந்தம் உயர்ந்து செல்கிறது.

வருமானத்தில் வீழ்ச்சி கண்டு வருகிறது. இதனை நிதி அமைச்சரே பல சந்தர்ப்பங்களில் ஒப்புக்கொண்டுள்ளார் அபிவிருத்தி, அபிவிருத்தி என்று வாய்கிழியக் கத்தும் அளவுக்கு அது நடக்கவில்லை. அவற்றுக்கு செலவிட ஒதுக்கப்பட்ட பணம் பாதுகாப்புக்கு விரயமாகிறது.

கூட்டு மொத்தமாகச் சொல்வதானுல், பொருள் விலை அதிகரிப்பு குறைந்த சம்பளம் என்பனவற்றின் மூலம் சிங்கள மக்கள் வயிற்றில் அடிக்கப்படுகிறது

அதனை அவர்கள் உணர்ந்து கொண்டால் தமக்கு இருபக்கத் தலையிடி என்பதை அரசு அறியும். அதனைத் தடுப்பதற்காக புலிக்கதை சொல்லித் தப்பவும் பார்க்கிறது. தமிழனைப் பகைவனுகக் காட்டி, சிங்கள மக்களை உணர்ச்சி வசப் படுத்தி அவர்கள் பாதிக்கப்படுவதை அரசாங்கம் மறைத்து வருகிறது.

சிலரைப் பல காலம் ஏமாற்றலாம், பலரைச் சிலகாலம் ஏமாற்றலாம். எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது. உண்மைகள் உறங்கா. அவற்றை நீண்ட காலத்துக்கு ஒளித்து மறைத்து வைத்திருக்கவும் இயலாது.

இந்தச் சிறு கணக்கு அரசாங்க உயர் பீடத்தில் உள்ளவர்களுக்கு விளங்காமல் இல்லை. எனினும் மண்ணுக்குள் தலையைப் புதைத்த தீக்கோழியாக நிற்கிறது அரசாங்கம்.

ஆனுல் மக்கள் அப்படியல்ல சிங்கள மக்களும் அரசின் தமிழருக்கு எதிரான கெடுபிடிகளையும், தாம் "பேய்க்" காட்டப்படுவதையும் புரியத் தொடங்கிவிட்டார்கள். அதற்கு ஆரம்ப அறிகுறிகள் இப்போது தென்படத் தொடங்கி உள்ளன.

தமிழர்களைக் கொல்வதை நிறுத்தி, அவர்களின் பிரச்சினையைத் தீர்த்து, உரிமைகளை வழங்கினுல் பாதுகாப்புக்கு பெருந்தொகைப் பணத்தைச் செலவிட வேண்டியிராது. அந்தப் பணத்தில் நாட்டை முன்னேற்றலாம். மக்களுக்கு வசதி படைத்த வாழ்க்கைக்கு வழி செய்யலாம்

இவற்றைச் சிங்கள மக்களில் பெரும் எண்ணிக்கையினர் உணரத் தலைப்பட்டுவிட்டால் அரசு ஆட்டங் காணத் தொடங்கும் அது எவ்வளவு அராஜகத்தை அவிழ்த்து விட்டாலும் மக்கள் சக்திக்கு ஈடு கொடுக்க இயலாது.

எனவே தாதிகள் வேலை நிறுத்தம், 21 தொழிற்சங்கங்கள் மாநாடு ஆகியவற்றுடன் எதிர்ப்பு ஆரம்பமாகி இருக்கிறது. அரசின் அநியாயத்தை எதிர்க்கும் வேறு இயக்கங்கள் மூலமும் அது தென்னிலங்கையில் வளர வேண்டும். அவற்றுக்குத் தமிழ் மக்கள் ஆதரவும் தேவை. அதன் மூலம் அரசாங்கத்துக்கு தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒருவகை நெருக்கடியைக் கொடுக்கலாம் அல்லவா?

## விவசாயிகள் சம்மேளனம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

நீர்வேலி பயிர்ச்செய்கை உத்தியோகத்தரின் பகுதிக்கு உட்பட்ட பிரதேசத்திற்கு சிறு விவசாயிகள் சம்மேளனம் ஒன்று எதிர்வரும் சனிக்கிழமை காலை அங்குரார்ப்பணஞ் செய்யப்படும்.

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். இந்த நிகழ்ச்சிக்கு நீர்வேலி பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. ச. இ. தவராசா தலைமை வகிப்பார்.

சமநல சேவைத் திணைக்கள சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு. க. பரமலிங்கம் உட்பட பலர் கூட்டத்தில் பேசுவர்.

# தமிழர்களுக்கு உயர் பதவி இது வெறும் "ஜன்னல் அலங்காரமே"

## ஜனுதிபதியின் கூற்றுக்கு சிவாவின் சிலேடை

தமிழர்களும் உயர் பதவிகள் வகிக்கின்றுர்கள் என்று இலங்கை அரசு கூறுகின்றது.

எல்லா அரசாங்களிலும் இப்படியான 'ஜன்னல் அலங்காரங்கள்' உண்டு.

இப்படிக் கூறுகின்றுர் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம்.

'இந்து' நாளிதழில் திரு சிவசிதம்பரம் எழுதிய கட்டுரையின் இறுதித் தொகுதி இன்று பிரசுரமாகிறது.

இலங்கை முழுவதும் தமிழருக்குச் சொந்தம்— இப்படி 'இந்து' நாளிதழுக்கு அளித்த பேட்டியில் திரு. ஜெயவர்த்தனு கூறியிருந்தார்.

அதே பேட்டியில் இன்னெரு இடத்தில் 'கிழக்கு மாகாணம் சிங்களவருக்குச் சொந்தமானது' என்று கூறியிருந்தார்.

இது 'வடக்கு—கிழக்கு தமிழரின் தாயகம், ஒரு ஒரு மொழி மாநிலம்' என்ற எமது கோரிக்கையை மறுதலிக்கவே கூறப்பட்டது

தமிழர்மீது பாரபட்சம் காட்டப்படவில்லை என்பதைத் தெரிவிக்க திரு ஜெயவர்த்தனுவும் அவரது சகாக்களும் உயர் அரசாங்கப் பதவிகளில் இருக்கும் தமிழர்களைச் சுட்டிக்காட்டுவது வழக்கமாகி விட்டது.

உண்மையில் எல்லா அரசாங்கங்களிலும் இப்படியான 'ஜன்னல் அலங்காரங்கள்' உண்டு.

பொலீஸ் மா அதிபர் ஆகியோர் தமிழராக இருந்திருந்தால் அவர்கள் அந்த நிலைக்கு கஷ்டப்பட்டே வந்தவர்கள்

அந்த இடத்துக்கு இன்னெரு தமிழர் எப்போது வருவார் என்பதைப் பட்டியலின் கீழ் பகுதியில் பார்த்தால் தான் உண்மை தெரியும்.

சில மாதங்களுக்கு முன்னர் இங்கிலாந்து,மேற்கு ஜெர்மனி நாடுகளில் இலங்கைத் தூதர்களாகத் தமிழர் உள்ளனர் என்பதை இலங்கை அரசு சுட்டிக்காட்டியது

இன்று எத்தனை தமிழ்த் தூதுவர்கள் உலக நாடுகளில் பணி புரிகின்றனர்?

ஆயுதப் படையினரின் அத்துமீறல்களை திரு. ஜெயவர்த்தனு ஏற்றுக் கொள்கிருர்.

வன்செயல்களைக் கண்டிப்பதாகவும் அவர் கூறுகிருர். 1983இல் இடம் பெற்ற வன்செயல்களை இனக் கொலை என்றும் ஒப்புக்கொண்ட திரு ஜெயவர்த்தனு 1983 ஜூலை சம்பவங்களின் பின்னர் எப்படி நடந்து கொண்டார் என்பதைப் பார்ப்போம்.

திரு. ஜெயவர்த்தனு அமைதியாக இருந்தார் சில தினங்களுக்குப் பின்னர் ரூபவாஹினியில் தோன்றிப் பேசினுர். வானெலியில் பேசினுர்.

வன்செயல்களில் இறந்த தமிழர் குறித்து அனுதாபம் அவர் தெரிவிக்கவில்லை.

வன்செயல்களில் ஈடுபட்டவர்களை அவர் கண்டிக்கவில்லை அதற்குப் பதில், 'சிங்கள மக்களின் அபிலாஷைகளை, கோரிக்கைகளை நிறைவேற்றும் காலம் வந்துவிட்டது'— என்று சொன்னுர்.

தவறுவிட்ட ஆயுதப் படையினரை விசாரித்து தண்டனை வழங்கியதாக திரு. ஜெயவர்த்தனு இன்று கூறுகிருர்!

எமக்கு இரண்டு சம்பவங்கள் பற்றித் தெரியும். 13-7-1979 இல் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட ஆறு தமிழ் இளைஞர்கள் பின்னர் காணுமற் போய் விட்டனர்.

இரண்டு பேரின் சடலங்கள் பின்னர் வீதியில் கிடக்கக் கண்டுபிடிக்கப் பட்டன. மற்றவர்கள் காணுமலே போய்விட்டனர்

சர்வதேச நெருக்குதலுக்கும் பொதுசன நிர்ப்பந்தத்துக்கும் பணிந்து திரு. லலித் அத்துலத் முதலியின் தலைமையின் கீழ் நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழுவில் ஒரே ஒரு தமிழ் உறுப்பினராக நான் பணியாற்றினேன்

சடலங்களாகக் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு இளைஞர்களும் சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் காவலில் இருந்தவர்கள் தான் என்று தெரிவுக் குழு ஏகமனதான முடிவுக்கு வந்தது. விசேட குழு ஒன்று இது பற்றி ஆராய வேண்டும் என்றும் தெரிவுக் குழு சிபார்சு செய்தது.

நடந்தது என்ன? சம்பந்தப்பட்ட பொலீஸார் மீது விசாரணை நடைபெறவே இல்லை விசாரணைக்குப் பதில் அந்தப் பொலீஸார் பதவி உயர்வுடன் பொலீஸ் சேவையில் இன்னும் இருக்கிறுர்கள்.

இரண்டாவது சம்பவம் 1983 ஜூலையில் திருகோணமலைப் பட்டினத்தில் கடற்படையினர் சிலர் அட்டகாசம் புரிந்தனர். அவர்கள் கடற்படையில் இருந்து விலக்கப்பட்டனர்.

கடற்படையில் இருந்து வெளியேற்றப் பட்ட ஒவ்வொருவரும் கூட்டுத்தாபனங்களில் வேலைக்கமர்த்தப் பட்டனர்.

இதற்கான பழியை திரு சிரில் மத்தியூ மேல் திரு. ஜெயவர்த்தனு போட்டார்.

அரசாங்கம் தனது பழிகளை போடுவதற்கு திரு சிரில் மத்தியூ வசதியாக வாய்த்துக் கொண்டார்.

ஆரம்பத்தில் இருந்து திரு மத்தியூ தமிழர் எதிர்ப்பு உணர்ச்சியைக் கக்கி வருபவர். திரு சிரில் மத்தியூவின் தமிழர் எதிர்ப்பு நடவடிக்கைகள் பற்றி திரு. ஜெயவர்த்தனுவுக்கு தெரியாமல் இருக்கமுடியாது.

திரு சிரில் மத்தியூ சந்தேகமில்லாம் ஒரு வில்லனே ஆனுல் அவர் மட்டும் தான் வில்லன் அல்ல.



**பொய்யாமொழி**

குறள்:

தகுதி எனவொன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின்

பொருள்:

அந்தந்தப் பகுதி தோறும் முறையோடு பொருந்தி ஒழுகப் பெற்றால், நடுவுநிலைமை என்று கூறப்படும் அறம் நன்மையாகும்.

## புதிய கோட்பாட்டின் கீழ் இலக்கியம் படைத்த பெருமை டானியலுக்கு உண்டு

### இரங்கல் நிகழ்ச்சியில் உரை

நல்லூர், மார்ச் 27

மக்களிடமிருந்து பாடம் கற்பது, கற்றவற்றை மக்களுக்குக் கற்பிப்பது என்றகோட்பாட்டின் கீழ் நின்று இலக்கியம் படைத்தவர் எழுத்தாளர் திரு டானியல்.

தஞ்சாவூரில் காலஞ்சென்ற திரு டானியலின் நல்லூரில் இருக்கின்ற இல்லத்தில் நேற்று நடைபெற்ற இரங்கல் வைபவத்துக்குத் தலைமை வகித்துப் பேசிய யாழ் பல்கலைக் கழகப் பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் தெரிவித்தார்.

கலாநிதி சண்முகதாஸ் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

சமூக ஒடுக்கு முறைக்கு எதிராக மட்டும் அவர் பேனவை பாவிக்கவில்லை. நீதிக்காக போர் தொடுத்த ஒடுக்கப்பட்ட மக்களில் ஒரு போராளியாகவும் அவர் விளங்கினுர்.

அவரது போராட்ட வழி, அனுபவம், சமூகத் தன்மை என்பவற்றை இலக்கியமாக மக்கள் முன் வைத்தவர் திரு. டானியல் என்றுர்.

மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா அங்கு உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

நண்பன் டானியலினதும் எனதும் ஒரே கால த்து எழுத்துக்கள் சமூகத்தின் குறைபாடுகளைக் கொழுத்திப் பற்ற வைக்கும் இலக்கியமாகப் பிரசவித்தன.

அத்தகைய நண்பரின் படைப்புகள் இன்று இலங்கையிலும், தமிழகத்திலும், ஜப்பானிலும் மானிடவியலாய்வுக்குரிய மூல நூலாக விளங்கப்படுகிறது.

திரு. டானியல் நேசித்த மண்ணில், நான் நேசித்த

மக்களிடையே காலமாகாது தமிழகத்தில் காலமடைந்து சர்வதேச கலைஞனுகி விட்டார். இப்படி அவர் சொன்னுர்.

ஜனுப் இக்பால், திரு. சொக்கன், வி.சின்னத்தம்பி, செம்பியன் செல்வன், எஸ் அகஸ்தியர், கிருஷ்ணபிள்ளை, நல்லை அமிழ்தன் ஆகியோருட்பட பலர் இரங்கலுரை நிகழ்த்தினர். பெரும் எண்ணிக்கையான இலக்கிய ஆர்வலர்கள் இரங்கல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## விடுமுறை வகுப்புகள்

நல்லூர், மார்ச் 27

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நல்லூர் பண்டாரக்குளம் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் சைவ சமயம், தேவாரப் பண்ணிசை, கர்நாடக இசை வகுப்புகளை இலவசமாக நடத்துகின்றது.

வகுப்பில் சேர விரும்பும் மாணவர்கள் மன்ற அமைப்பாளர் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி அவர்களைச் சந்தித்து ஒழுங்குகளைச் செய்து கொள்ளலாம்.

மேற்படி வகுப்புக்கள் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும்.

## முன்மாதிரி காட்டும் தொழிற்சாலை நிர்வாகம்

யாழ்ப்பாணம்,மார்ச்.27

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான தொழிலாளியின் குடும்பத்துக்கு நட்டஈடு வழங்குவதில் யாழ்ப்பாணத்தில் உள்ள தொழிற்சாலை ஒன்று முன்மாதிரி காட்டியுள்ளது.

கொல்லப்படும் சிப்பாய்களுக்கு அரசு வழங்குவது போன்ற நட்டஈடுத் திட்டம் ஒன்றை இத்தொழிற்சாலை நிர்வாகமும் செயற்படுத்த முன்வந்து உள்ளது.

இப்பெருமையைப் பெற்றுள்ளது, நாவற்குழியில் உள்ள மகேந்திரா கண்ணுடித் தொழிற்சாலை நிர்வாகம்.

விவரம் வருமாறு;

17. 3. 86 இல் நாவற்குழி முகாமில் இருந்து வந்த துப்பாக்கிக் குண்டு தாக்கி இக்கண்ணுடித் தொழிற்சாலையில் வேலை செய்து வந்த 14 வயது சிறுவன் ... மாணுன்.

பெற்றோர் நோயாளிகள். பாலகுமாரனும் அவன் தம்பி மதியழகனும் (வயது13) தொழிற்சாலையில் உழைத்தே குடும்பத்தை நடத்தி வந்தனர்.

சம்பவம் நடந்த அன்றே தொழிற்சாலை நிர்வாகிகள் கூடி பாலகுமாரனின் மரணச் செலவுகளைப் பொறுப்பு ஏற்று நடத்தினர் அது மட்டும் அல்ல

பாலகுமாரன் பெற்று வந்த சம்பளத்தை மாதாமாதம் தொழிற்சாலை இயங்கும் வரை அவனின் பெற்றோர்களுக்கு வழங்குவது;

✱ அரை குறையாகக் கட்டப்பட்ட நிலையில் உள்ள அவனின் பெற்றோர்களின் வீட்டை பூரணமாகக் கட்டிக் கொடுப்பது.

இப்படி மகேந்திரா கண்ணுடித் தொழிற்சாலை நிர்வாகம் தீர்மானித்து அறிவித்துள்ளது.

## காவலில் இருக்கும் இளைஞர்களுக்கு உதவ

### சட்டத்தரணிகள் சங்கம் தயார்

யாழ்ப்பாணம், மார்ச்.27

நீதிமன்ற விசாரணையின்றி பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களுக்கும் விசாரணைக்குட்படுத்தப் பட்டிருக்கும் இளைஞர்களுக்கும் யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கம் சகல உதவிகளும் வழங்கும்.

சங்கத்தின் அவசர விசேட பொதுக்கூட்டத்தில் இப்படி முடிவு செய்யப்பட்டது

▪ சங்கம் இயங்கும் பிரதேசங்களில் உள்ள அகதி முகாம்களுக்கு கூடியளவு நேரடி உதவி வழங்கும்.

✱ தற்போதைய ஆபத்தான நிலைபற்றி உள்ளூரிலும், வெளியூரிலும் உள்ள ஸ்தாபனங்களுக்கு அறிவித்து இலங்கையில் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் நடக்கும் அரசபடை அராஜக அட்டூழியங்களை நிறுத்தி நீதியை நிலைநாட்ட உதவுதல்.

மேற்கண்ட முடிவுகளையும் சங்கம் எடுத்துள்ளது.

## பெண்களைப் பாதுகாக்க உகந்த திட்டம் அவசியம்

### கருத்தரங்கில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 27-

இன்று நமது சமூகத்தில் இடர்மிக்க சூழல் காரணமாகப் பெருந்தொகையில் பெண்கள் விதவைகளாகும் வகையறு நிலை உருவாகி உள்ளது.

இவர்களுக்கு முற்போக்கு ரீதியில நிரந்தரமான புனர் வாழ்வுத் திட்டம் வகுத்து அமுலாக்க வேண்டும்.

முற்போக்கு எழுத்தாளர் சங்க யாழ் கிளையின் ஆதரவில் யாழ் இந்து விடுதியில் செவ்வாய் காலை "இன்றைய உலகில் பெண்கள்" என்ற தலைப்பில் உரையாற்றிய திருமதி. சர்வமங்களம் கைலாசபதி இவ்வாறு குறிப்பிட்டார். திரு என். சோமகாந்தன் தலைமை வகித்தார்.

தமிழகத்து சஞ்சிகைகள் பெண்களை அலங்கரிப்பது தொடர்பாக கருத்துக்களை வெளியிடுகின்றனவே ஒழிய பெண்ணடிமை ஒழிப்பதில் கரிசனை காட்டுவதில்லை.

இந்த வகையில் யாழ்ப்பாணத்தில் வெளிவரும் பெண் எழுத்தாளர்களின் கதைகள் கட்டுரைகள் உற்சாகம் அளிப்பனவையாக உள்ளன

இவ்வாறு திருமதி சகைலாசபதி தொடர்ந்து கூறினுர்.

பண்டிதமணி கணபதிப்பிள்ளை, நாவல் எழுத்தாளர் திரு. டானியல் ஆகியோர் காலமானதை யொட்டி கூட்ட ஆரம்பத்தில் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

சர்வதேச மகளிர் தினம் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டதைத் தொடர்ந்து, முற்போக்கு இலக்கிய வட்டம்இந்தத்தலைப்பிலான கருத்தரங்கினை ஒழுங்கு செய்ததாக திரு. சோமகாந்தன் தலைமையுரையில் கூறினுர்.

கலாநிதி சி. மௌனகுரு, கம்பன் கழகத் தலைவர் திரு.இ. ஜெயராஜ், பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திரு. சோ. பத்மநாதன், செல்வி. கைலாசபதி, கலாநிதி சோ. கிருஷ்ணராஜா உட்படப் பலரும் உரையாற்றினுர்கள்.

கலாநிதி சபா. ஜெயராசா நன்றியுரை கூறினுர்.

**வாசகர் நிருபகம்**

## தொலைபேசிக் கொலைகள்

ஒரு சில நாட்களுக்கு முன் யாழ் தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையத்தில் நுழைந்த தம்மை இனங்காட்டிக் கொள்ளாத நபர்கள் தொலைபேசிக் கட்டண வசூலிப்புச் சம்பந்தமான கோவைகள், ஆவணங்கள், சிட்டைப் புத்தகங்கள் என்பவற்றையும் திருப்பப்பட்ட காசோலைகளையும் எடுத்துச் சென்றுள்ளார்கள்

பின்னர் மேற்கூறிய நபர்கள் தொலைபேசிப் பாவனையாளர்களிடம் நிலுவையில் நிற்கும் கட்டணத்தை திகதி குறிப்பிட்டு தம்மிடம் கையளிக்கும் படி தொலைபேசியில் கேட்டிருக்கிறுர்கள் அச்சமயத்திலும் இவர்கள் தம்மை இனங்காட்டவில்லை.

தற்போதைய சூழ்நிலையில் பாதுகாப்பாக நடமாட முடியாத மக்களுக்கு தொலைபேசிகள் பலவகையிலும் உதவுகின்றன. வசதி படைத்தவர்களும், ஏழை, எளிய மக்களும் இவ்விதத்தில் உதவுகின்றவர்.

மேற்கொண்டு திணைக்களத்திற்கு கட்டணம், செலுத்தப்படாவிடில் யாழ் மாவட்டத்திலுள்ள அத்தனை தொலைபேசித் தொடர்புகளும் துண்டிக்கப்படலாம். இதனுல் சம்பந்தப்பட்ட நபர்களையும் அவர்களது உதவியாளர்களையும் தவிர்த்து, தமிழ் மக்களுக்காக உழைக்கும் பலவேறு ஸ்தாபனங்களும், அவற்றின் உதவியாளர்களும் பாதிக்கப்படலாம்.

எனவே சம்பந்தப்பட்டவர்களும் பாவனையாளர்களும் இது விடயத்தில் அறிவு பூர்வமாக சிந்தித்து செயற்பட வேண்டுகின்றேம்.

பொது நலன் விரும்பி
யாழ்ப்பாணம்.

## இருவரும் ஒன்ருக...

புதுடில்லி, மார்ச்.26

மறைந்த முன்னுள் குடியரசுத்தலைவர் திரு.எஸ். இராதாகிருஷ்ணன் பற்றிய கருத்தரங்கு புதுடில்லியில் அண்மையில் நடைபெற்ற சமயம் பிரதமர் ராஜீவ் காந்தியும் கொள்கை வகுப்புக்குழுத் தலைவர் திரு ஜி. பார்த்தசாரதியும் அருகருகே இருந்து உரையாடினுர்கள்.

நீண்டகாலத்திற்குப் பின்னர் முதன் முறையாக பொதுவைபவம் ஒன்றில் இருவரும் ஒன்ருகக்காணப்பட்டனர்.

**சமய சந்நிதிகளில்**

## வருடாந்த மகோற்சவம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் மார்ச் 29 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது.

ஏப்ரல் 14 இல் ரதோற்சவமும் ஏப்ரல் 15 இல் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

உற்சவ பிரதமகுருவாக நவாலியூர் பிரம்மஸ்ரீ வெங்கட சுப்பிரமணியக் குருக்கள் பணிபுரிவார்.

## சுவாமி சாந்தானந்தஜி பிறந்த தினம்

யாழ்ப்பாணம், மார்ச்27

சுவாமி சாந்தானந்தஜியின் பிறந்த தினம் ஏப்ரல் 7 ஆம் திகதி காலை 11மணியளவில் திருநெல்வேலி ராமகிருஷ்ணலயத்தில் கொண்டாடப்படும்.

சுவாமி சித்ருபானந்தாவின் அருளுரையும் இடம் பெறும்.

## 'வெள்ளோட்டம்' வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 27

கோப்பாய் ப. சிவம் எழுதிய 'வெள்ளோட்டம்' குறுநாவல் வெளியீட்டு விழா மார்ச் 28 வெள்ளிக்கிழமை பிற்பகல் நல்லூர் இந்து விடுதியில் நடைபெறும்.

யாழ் இலக்கிய வட்டம் இதனை ஒழுங்கு செய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9ஆவது வருட சேவை!
O/L Day Class (8.30 - 1.30)
(இரண்டாவது பிரிவு)
ஆரம்பமாகவுள்ளது
விக்னு டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

உதயன்
27. 03. 1986 வியாழக்கிழமை

9 வது வருட சேவை!
O/L Evening Class (2.30 p.m.)
(மூன்றாவது பிரிவு)
ஆரம்பம்: 1 . 4 . 86
5,6,7,8,9, ம் வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.
விக்னு டியூசன் சென்ரர்
52 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# இலங்கையின் வெறும் வார்த்தைகளை நம்பி ஏமாறக் கூடாது

## வடஇந்திய எம். பிக்கள் வலியுறுத்து

புதுடில்லி, மார்ச், 26

இலங்கைத் தமிழர் மீதான தாக்குதல் அப்பட்டமான படுகொலையாகும்.

இப்பிரச்சினை சம்பந்தமாக இந்தியா உறுதியான நிலை எடுக்கவேண்டும்.

இலங்கை அரசின் வெறும் வார்த்தைகளை நம்பி இந்தியா ஏமாறக் கூடாது.

இப்படி இந்திரா காங்கிரஸ் எம். பி. திரு. குர்திலால்சிங் சொன்னார்.

இந்திய நாடாளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சு நிதிஒதுக்கீடு விவாதத்தின்போது பல எம். பிக்கள் காரசாரமாகப் பேசினர்.

அச்சமயமே திரு. குர்திலால்சிங்மேற்கண்டவாறு சொன்னார்.

இந்திரா காங்கிரஸ் எம். பியான திரு. பி. ஜே. குரியன் பேசுகையில் சொன்னதாவது:

இலங்கை அரசின் நடவடிக்கைகள் தமிழருக்கு எதிரான உண்மையான வடிவத்தை இப்போது தான்பெற்றுள்ளன.

இலங்கைப் பிரச்சினை, இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது.

ராஜதந்திர நெருக்குதல்களைக் கொடுத்து பிரச்சினையைத் தீர்க்க இந்தியா நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்திரா காங்கிரஸ் எம். பி. திரு. ஏ. கே. திவாரி பேசுகையில் சொன்னதாவது:

பாகிஸ்தான்-இலங்கை ராணுவக் கூட்டு பிராந்திய ரீதியானது என்று வர்ணிக்க முடியாது. இதுசர்வதேச ரீதியிலான பிரச்சினையாக மாறிவிட்டது.

கம்யூனிஸ்ட் கட்சி எம். பி. திரு இந்திரஜித் குப்தா பேசுகையில் சொன்னதாவது:

ஆயுதங்கள் கொள்வனவு சம்பந்தமான பேச்சுக்களை இஸ்ரவேலில் திரு. ஜெயவர்த்தனவின் மகன் நடத்தியுள்ளார். கிழக்கு மாகாணத்தில் இராணுவத் தாக்குதல்களை நடத்துவதற்கு திரு. ரவி ஜெயவர்த்தனவே பொறுப்பாக இருந்திருக்கிறார்.

இந்தியா, உபகண்ட வல்லரசாக உருவாவதை சீன எதிர்ப்பதாக சீன ஜனாதிபதியே இலங்கை சென்றசமயம் திரு ஜெயவர்த்தனவிடம் கூறியிருப்பதாகத் தகவல்கள் வந்துள்ளன.

மேற்குநாட்டுச் சக்திகள் இலங்கைக்கு உதவி தங்கள் ஆதிக்கத்தைப் பலப்படுத்துகின்றன.

இப்படி திரு. இந்திரஜித் குப்தா சொன்னார்.

## சிலிண்டர் வெடிப்புக்கு செம்படை உரிமை கோருகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 27

மார்ச் 25 இல் சப்புகஸ் கந்தையில் உள்ள எல். பி. காஸ் தொழிற்சாலையில் காஸ் சிலிண்டர் வெடித்த சம்பவத்துக்கு தமிழீழ செம்படை இயக்கம் உரிமை கோரியுள்ளது.

'சிறிலங்கா பொருளாதார' வளங்களை நிர்மூலமாக்குவோம் என்ற தலைப்பில் தமிழீழ செம்படை இயக்கம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

எமது செம்படை கெரில்லாக்களினால் திட்டமிட்டு அனுப்பப்பட்ட சிலிண்டரே 25. 3. 1986 இல் சபுகஸ் கந்தையில் உள்ள எல். பி. காஸ் தொழிற்சாலையில் வெடித்தது.

சிறிலங்கா பேரினவாத அரசினது பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு ஆதாரமாக அமையும் அதன் பொருளாதாரத்தினை நிர்மூலமாக்கும் எமது நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாகும்.

இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## தெல்லிப்பளையில் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குரும்பசிட்டிப் பக்கமாகச் சென்று அங்கும் சுமார் அரை மணித்தியாலமாக துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த ஹெலிக்கொப்டர் பலாலி விமான நிலையத்துக்குச் சென்றது.

ஹெலிக்கொப்டர் மீண்டும் இரண்டாவது தடவையாக வந்து மிகப் பதிவாகத் தாழப்பறந்து வயாவிளான் ஊடாக குரும்பசிட்டி, கட்டுவன், தெல்லிப்பளையை நோக்கிச் சென்றது. இம்முறை சுமார் ஒரு மணி நேரம் ஹெலிக்கொப்டர் தாக்குதல் நடந்தது.

குரும்பசிட்டியில் கிராம முன்னேற்றச் சங்கத்துக்கு முன்பாகவும் வேட்டுகள் தீர்க்கப்பட்டன. அப்போது கொழும்பைச் சேர்ந்தவரும் குரும்பசிட்டிப் 'பேக்கரி' ஒன்றில் பணிபுரிந்தவருமான ஒருவர் காயமடைந்தார்.

இளம் பெண் ஒருவரின் இடுப்பினை ஒரு குண்டு தாக்கியது

ஹெலிக்கொப்டரின் தாக்குதலில் இருந்து தப்பவென நிலத்தில் படுத்துக்கொண்ட இருபத்திரண்டு வயது இளைஞர் ஒருவர் மரணமானார்.

தெல்லிப்பளை, அரசினர் வைத்தியசாலையை இரண்டுமுறை சுற்றிய ஹெலிக்கொப்டர் சரமாரியாகச் சுட்டதுடன் அம்பனை, அளவெட்டிப் பகுதிகளுக்கும் சென்று வேட்டுக்களைத் தீர்த்தது.

பின்னர் குரும்பசிட்டி ஊடாக திரும்பிவந்து பலாலி விமான நிலையத்தை நோக்கிச் சென்றது.

திரும்பிச் செல்லும் போது குரும்பசிட்டியில் போராளிகள் ரொக்கெட் லோஞ்சரால் எதிர்த்தாக்குதல் நடத்தினர் என அறியப்படுகிறது.

## சடலம் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முக்கு மிகச் சமீபமாகச் சென்ற ஒருவர் முகாமிலிருந்து வந்த துப்பாக்கிச் சூட்டினால் மரணமானார்.

இதனால் அச்சடலம் யார் என அறியமுடியாத நிலையில் அந்த இடத்திலேயே கிடந்தது

கடந்த இரவு இளைஞர்களின் பெருமுயற்சியினால் அச்சடலம் அந்த இடத்திலிருந்து எடுக்கப்பட்டது. அழுகிய நிலையிலிருந்த அச் சடலம், பின்னர் அடையாளம் காணப்பட்டு, உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

## காயமடைந் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடை ஒன்றில் கடமைபுரிபவர். கொழும்பு மாவிகாவத்தையைச் சேர்ந்த இவர் 7 பிள்ளைகளின் தந்தை தோளில் சூடுபட்டுள்ளது.

2. செல்வி. ம. அம்பிகா (வயது 16) குரும்பசிட்டியைச் சேர்ந்தவர். இடுப்புக்குக் கீழ் சூடுபட்டு படுகாயமடைந்து யாழ் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

3. திரு. சுப்பையா நாகநாதன் (வயது 31) தெல்லிப்பளை கிழக்கைச் சேர்ந்தவர் காலில் சூடுபட்டுள்ளது. லொறிச் 'கிளினர்' ஆகக் கடமை ஆற்றும் இவர் நீண்ட தூரம் துரத்தித்துரத்திச் சுடப்பட்டார்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்; த ஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15,2 ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியிட்ட திகதி 27-03-1986
Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka under number QJ60 N 86

## வெளிவாரிப் பரீட்சை:- பேராதனை செல்வோருக்கு விசேட போக்குவரத்து ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 27

கொழும்பில் நடைபெறவுள்ள பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைக்கு செல்லும் பரீட்சார்த்திகளுக்கு யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் போக்குவரத்து ஏற்பாடுகளைச் செய்து கொடுத்துள்ளார்

பரீட்சார்த்திகள் மார்ச் 28 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். ஸ்டான்லி வீதியில் உள்ள பட்டப்படிப்புக் கல்லூரியில் பெயர்களை பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

பதிவுசெய்ய வரும்போது தேசிய அடையாளக் காட், பல்கலைக்கழகப் பதிவுப் புத்தகம் ஆகியவற்றைக் கொண்டு வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பரீட்சார்த்திகள் கொழும்பு செல்வதற்கான பஸ் ஏப்ரல் முதலாம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும்.

## கூட்டுறவுச் சங்க நெசவாலையை மூடும் அபாயம் ஏற்பட்டுள்ளதாம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ் மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச்சங்கத்துக்குச் சொந்தமான வாகனங்கள் கடத்தப்பட்டதால் சங்கத்துக்குச் சொந்தமான தொழிற்சாலையை மூடும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

சங்கப் பொதுமுகாமையாளர் திரு. ஏ. லக்ஷ்மணன் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

ஜனவரி 16ஆம் திகதி சங்கத்துக்குச் சொந்தமான வான் ஒன்று கடத்தப்பட்டது.

கடந்த செவ்வாய் இரவு லொறியும் கடத்தப்பட்டது

இதனால் சங்கத்தை நடத்தமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது சங்கத்தில் 150 பேர் வரை வேலை செய்கின்றனர். 1,200 பரம்பரை நெசவாளர்கள் சங்கத்தை நம்பி வாழ்கின்றனர்.

சங்கத்துக்கு 2 கோடி வங்கிக் கடனும் உண்டு.

இந்த நிலையில் கடத்தப்பட்ட வாகனங்கள் திருப்பி ஒப்படைக்கப்படாவிட்டால் ஏழைக் குடும்பங்கள் தொழில் இன்றிக் கஷ்டப்பட வேண்டி நேரிடும்.

"மனிதாபிமான அடிப்படையில் வாகனங்களைத் தந்து உதவுங்கள்." — இப்படி பொதுமுகாமையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## பத்திரிகையாளரும் தமது சொத்துக்களை பிரகடனப்படுத்த வேண்டும்

கொழும்பு. மார்ச் 27

பத்திரிகை நிறுவன உரிமையாளர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய குழுவினர் ஆகியோரும் இனி சொத்துக்களைப் பிரகடனஞ் செய்யவேண்டும்.

சொத்துக்கள் பிரகடனம் செய்யும் சட்டத்தில் பத்திரிகை நிறுவனங்களையும் சேர்க்க அமைச்சரவை நேற்று முடிவு செய்தது.

அரசியல் அலுவலக அதிகாரிகள், தொழிற்சங்க வாதிகள், கூட்டுத்தாபன அதிகாரிகள், பத்திரிகை நிறுவன உரிமையாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், ஆசிரியர் குழுவினர் ஆகியோரும் சொத்துக்களைப் பிரகடனம் செய்யக்கூடியதாக அச் சட்டத்தை விரிவுபடுத்த அமைச்சரவை தீர்மானித்தது

## மூன்று இடங்களில் தாக்குதல் 20 இராணுவ வீரர், 2 ஊர்காவல் வீரர் பலி! பலர் படுகாயம் என புலிகள் அறிக்கை

சென்னை, மார்ச் 26

கடந்த செவ்வாய்க்கிழமை மூன்று இடங்களில் தாங்கள் நடத்திய வெவ்வேறு தாக்குதல்களில் 20 இராணுவ வீரர்களும், இரண்டு ஊர்காவல் படைவீரர்களும் கொல்லப்பட்டதாகவும்–பல வீரர்கள் படுகாயம் அடைந்ததாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் சென்னையில் அறிவித்திருக்கிறார்கள்

புலிகள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;–

காலை 6.45 மணியளவில் நாவற்குழி இராணுவ முகாமுக்கு முன்பாக உள்ள வீதியில் வீதித் தடையை அகற்றுவதற்காக, 15 இராணுவத்தினர் வந்த சமயம் எமது வீரர்கள் சிலிண்டர் தாக்குதல் மேற்கொண்டனர். இராணுவ தரப்பில் 2 பேர் பலி. 2 பேர் காயம்.

காலை 11 மணியளவில் ஹபரணைக்கு அண்மையிலுள்ள கித்துலுத்து என்ற இடத்தில் வாகனத்தில் வந்த இராணுவம் மீது மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலில் 15 இராணுவத்தினர் பலி. பலர் படுகாயம், தமிழீழத்தின் எல்லைப் பகுதியில் இந்தக் கிராமம் முன்பு தமிழ்ப் பகுதியாகஇருந்தது. தற்போது முற்று முழுதாகச் சிங்களக் கிராமமாக்கப்பட்டுள்ளது. மூன்று வாகனங்களின் தொடரில் முன்னுக்கு வந்த கவசவாகனமே கண்ணிவெடிக்கு உட்பட்டதாகும்.

நேற்று மாலை 3.30 மணியளவில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சிலோன் தியேட்டருக்கும் டொலர் பாமுக்கும் இடையில் ஒரு பஸ்ஸில் ஊர்காவல் படையினரும், இராணுவத்தினரும் வந்த சமயம் எமது வீரர்கள் தாக்குதல் மேற்கொண்டனர். 3 இராணுவ வீரர்கள் 2 ஊர்காவல் படையினர் உட்பட ஐவர் பலி. 8 பேர் காயம்.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

## குரும்பசிட்டியில் சேதமடைந்த வீடுகள்

பலாலி, மார்ச் 27

நேற்று குரும்பசிட்டியில் ஹெலிக்கொப்டரில் இருந்து ஏவப்பட்ட குண்டினால் பாதிக்கப்பட்ட வீடுகளினது விவரம்:–

1. ஓய்வு பெற்ற பொலீஸ் இன்ஸ்பெக்டர் திரு நல்லையாவின் வீடு. வீட்டின் பின்பகுதியில் இருந்த சமையலறை முற்றாக எரிந்துள்ளது.

யன்னல்கள் உடைந்து நொருங்கியதுடன், சுவர்கள் பல பகுதிகளில் துளைக்கப்பட்டுள்ளன.

தளபாடங்கள் நொருங்கியுள்ளன. சம்பவம் நடந்த சமயம் வீட்டில் இருந்த திருமதி நல்லையாவும் அவரது இரண்டு பிள்ளைகளும் அதிஷ்டவசமாக உயிர் தப்பினர்.

2. மதுவரித் திணைக்களத்தின் பரிசோதகராகக் கடமை புரியும் திரு. இராஜசிங்கம் என்பவரது வாடகை வீடு பலாலி விமான நிலையப் பகுதியில் இருந்த தமது சொந்த வீட்டிலிருந்து இடம் பெயர்ந்து வாடகை வீட்டிற்கு வந்தவர்

வீட்டின் யன்னல்கள் தாக்குதலால் பிடுங்கி வீசப்பட்டுள்ளன. சுவர் நொருங்கியுள்ளது. வீடு மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் நடந்த சமயம் வீட்டில் யாரும் இருக்கவில்லை.

இவை தவிர குரும்பசிட்டி பொன் பரமானந்தா வித்தியாசாலை [illegible] ஓடுகள் உடைந்து பெயர்க்கப்பட்டுள்ளன.

## இலங்கை . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டார் என்று நம்பகமாகத் தெரிகிறது.

இனப் பிரச்சினையை பேச்சுக்கள் மூலம் தீர்க்க இந்தியா நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இராணுவ உதவிகளை வழங்கி அந்த வாய்ப்புக்களுக்குக் குந்தகம் ஏற்படுத்த சீன விரும்பவில்லை.

இப்போதுதான் சீன–இந்திய உறவுகள் சீராகி வருகின்றன.

இராணுவ உதவிகளை இலங்கைக்கு வழங்குவதன்மூலம் இப்பிராந்தியத்தில் பதற்ற நிலையை ஏற்படுத்த சீன விரும்பவில்லை

இப்படி சீன ஜனாதிபதி கொழும்பில் வைத்தே இலங்கை ஜனாதிபதிக்கு நேரடியாகக் கூறிவிட்டதாக நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.



மீன்பிடித் தடைச் சட்ட விதிகளை எதிர்த்து கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறையில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது பருத்தித்துறை பிரஜைகள் குழுவும், அப்பகுதி மீனவர்களும் இணைந்து இந்தப் பேரணியை நடத்தினர்.

## விளையாட்டரங்கு

சாதனை புரிந்து வரும்

## யூனியன் கல்லூரி அணி! திறமைமிக்க இளம் வீரர்கள் குழாம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

வடபகுதி கிரிக்கெட் ரசிகர்களின் ரசனைக்கு விருந்தான மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டிகள்நடைபெற்று வருவது தெரிந்ததே.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றி வரும் கல்லூரிக் கிரிக்கெட் அணிகளை விளையாட்டரங்கில் ரசிகர்களுக்கு அறிமுகப் படுத்திவருகிறோம்

இந்த வரிசையிலே இன்று தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அறிமுகப்படுத்தப்படுகிறது

இந்த அணி துடிப்பான பல இளம் வீரர்களைக்கொண்டு திறமையாக விளையாடி வருகிறது.

அணித் தலைவர் சபாரத்தினம் ஸ்ரீதரன்: நிதானமாக நின்று, லாவகமாகத் துடுப்பெடுத்தாடும் வலதுகை துடுப்பாட்ட வீரர். அணியின் விக்கெட் காப்பாளர். அணிக்காக இரண்டாவது வருடமாக ஆடுகின்றார். வேகமாக ஓட்டங்களைக் குவிக்கக்கூடிய துடுப்பாட்ட வீரர்.

மூத்ததம்பி சதானந்தன்:–அணியின் உபதலைவர், பந்துகளை விளாசியடித்து வேகமாக ஓட்டங்களைக் குவிக்கும் வலதுகை துடுப்பாட்ட வீரர். இவரிடம் இந்த அணி அதிகம் எதிர்பார்க்கிறது.

சின்னத்துரை ரமணன்: கடந்த வருட அணியின் தலைவர். அணியின்ஆரம்ப வலதுகை பந்து வீச்சாளர். சிறந்த துடுப்பாட்ட வீரர். பல்துறை வல்லுநரான இவர் இந்த அணிக்காக ஐந்தாவது வருடமாக ஆடுகிறார். அணியின் நம்பிக்கை நட்சத்திரங்களுள் ஒருவர்.

சிவராஜசிங்கம் ஜெயராஜ்: வலதுகை பந்து



ஸ்ரீதரன்

வீச்சாளர், சிறந்த வலதுகை துடுப்பாட்ட வீரர். இரண்டுவருட அனுபவம் உள்ளவர்.

திருச்செல்வம் கேதீஸ்வரன்: அணியின் இடதுகை ஆரம்ப பந்துவீச்சாளர். இடதுகை துடுப்பாட்டவீரர் அணியின் திடமான வீரர். அணிக்குப் புதுமுகம்.

எட்வேட் பொன்வில்லியஸ்; அணியின்ஆரம்ப வலதுகைகதுடுப்பாட்டக்காரர். அணியை அவ்வப்போது காப்பாற்றி வரும் வலதுகை பந்து வீச்சாளர் சிறந்த பந்து தடுப்பாளர். சிறந்த எதிர்காலமுள்ள வீரரான இவர் அணிக்குப் புதுமுகம். பல சாதனைகளை இந்த இளம் வீரரிடமிருந்து எதிர்பார்க்கலாம்.

கண்ணப்பர் அஜந்தன்; அணிக்கு உபயோகமான இடதுகை பந்து வீச்சாளர், சிறந்த இடதுகை துடுப்பாட்ட வீரர். அணிக்கு புதுமுகம்.

சி. ஆனந்தன்: அணியின் ஒரேயொரு சுருள் பந்து வீச்சாளர் சிறந்த பந்து தடுப்பாளர்

அந்தோனிப்பிள்ளை ரஞ்சித்:– வலதுகை பந்து வீச்சாளர், வலதுகை துடுப்பாட்ட வீரர்.

செல்லப்பா குலேந்திரன்: இடதுகை பந்துவீச்சாளர், வலதுகை துடுப்பாட்ட வீரர்.

செல்வரெத்தினம் சுதன்: சிறந்த வலதுகை துடுப்பாட்ட வீரர். அபாரமாக பந்து தடுக்கும் வீரர்.

இராஜநாயகம் எட்மிச்: இடதுகை பந்து வீச்சாளர். வலதுகை துடுப்பாட்ட வீரர்.

கந்தையா உமைபாலன்: வலதுகை துடுப்பாட்டவீரர். சிறந்தபந்து தடுப்பாளர்.

கடந்தவாரம் நடைபெற்ற சினேகபூர்வமான கிரிக்கெட் ஆட்டம் ஒன்றில் சிறப்பாக விளையாடி திறமை வாய்ந்த கொக்குவில் இந்துக்கல்லூரியை தோற்கடித்ததன் மூலம் யூனியன் அணி தனது தகுதியை நிரூபித்துக்கொண்டிருக்கிறது.

யூனியன் கல்லூரிஅணியின் பயிற்றுனராக கல்லூரியின் விளையாட்டுப் பொறுப்பாசிரியர் திரு வி. பாலசிங்கம் கடமையாற்றுகிறார்.

திரு எஸ் சிவகுமார் அணியின் பொறுப்பாசிரியராக செயற்பட்டு வருகிறார்.

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர் வகுப்புகள் நடைபெறுகின்றன

யாழ்ப்பாணம், மார்ச் 27

உதைபந்தாட்ட மத்தியஸ்தர் வகுப்புக்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகின.

முதலாவது வகுப்பை உடுவில் அதிபர் திரு. ஏ. மகாலிங்கம் ஆரம்பித்து வைத்தார்.

யாழ் மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் ஆதரவுடன் இணுவில் அமெரிக்க மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் இந்த வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

இந்த வகுப்புக்கள் தொடர்ந்து பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும்.

இதில் பங்குபற்ற விரும்புவோர் யாழ் மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் (J. D. F. R. A) உபதலைவரும், வட்டாரக் கல்வி (உடற் கல்வி) அதிகாரியுமான திரு. வி. கணேசலிங்கத்துடன் தொடர்புகொள்ளலாம்.

தொண்டமானாறில்

## சிப்பாய் ஒருவர் பலி

வல்வெட்டித்துறை, மார்ச், 27

நேற்றைய தினம் மாலையில் தொண்டமானாறு இராணுவ முகாமைச் சேர்ந்த மூன்று இராணுவத்தினர் தொண்டமானாற்றினூடாக உள்ள நீர்ப்பாசன இரும்புப் பாலத்தின் மூலம் இக்கரை வர முயன்ற பொழுது, போராளிகள் அவர்கள் மீது சுட்டதாகச் சொல்லப்படுகிறது.

இதன் காரணமாக மூன்று இராணுவத்தினரில் ஒரு இராணுவ சிப்பாய் பலியாகியுள்ளார்.

இச்சம்பவம் நடந்த சிறிது நேரத்தில் முகாமிலிருந்து 'ஷெல்' தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது

## நாவற்குழியில் தாக்குதல்

நல்லூர், மார்ச் 27

நாவற்குழி வீதியால் இரவு நேரத்தில் சைக்கிளில் சென்றவர் சீருடை அணிந்தவர்களால் தாக்கப்பட்டார்.

கடந்த திங்கட்கிழமை இரவு ஏழு மணியளவில் கந்தன் நாகராசா (28 வயது) என்ற இளைஞர் இணுவிலில் இருந்து தச்சன்தோப்புக்கு செல்லும் வழியில் சீருடையினரால் தாக்கப்பட்டார்

உட்காயங்கள் ஏற்பட்ட நிலையில் இவர் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org